பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆவணி 10 | செவ்வாய்க்கிழமை | 26.08.2025 | அதிர்வு 25

## ரணிலுக்காக ஓரணியில் திரள்வோம்



### ஹிருணிகா அழைப்பு

“முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்கவின் கைது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை ஆகும். எனவே, 06



# ரணிலின் கைது ஜனநாயகத்துக்கு விடுக்கப்பட்ட மிகப் பெரிய சவால்!

## கட்சித் தலைவர்களுடனான சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



“முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் கைது தனிப்பட்ட சம்பவம் அல்ல. அது மாறாக ஜனநாயக அரசியலுக்கு விடுக் கப்பட்ட மிகவும் வலுவான சவாலாகும்.” - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 06

# செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வுப் பணிகள் மீள ஆரம்பம்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் இடைநிறுத்தப்பட்ட இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் நேற்று மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் கடந்த ஓகஸ்ட் 6ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டன.

இதுவரை 41 நாட்கள் இடம்பெற்ற அகழ்வில் தடயவியல் அகழ்வாய்வுத் தளம் ஒன்றில் இருந்து 141 மனித என்புத் தொகுதிகளும், தடயவியல் அகழ்வாய்வுத் தளம் 06






கைது செய்யப்பட்டு, விளக்கமறியல் கைதியாகக் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியின் விசேட கவனிப்பு பிரிவில் நோயாளியாகத் தங்க வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வழக்கு இன்று கொழும்பு நீதிமன்றத்தில் மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான இந்த வழக்கின் போக்கு எப்படி அமையும் என்பதை இன்றைய தவணையின் போது இடம்பெறக் கூடிய சட்ட முடிவுகள் தீர்மானிக்கும் எனக் கருதப் படுகிறது.

ரணில் விக்கிரமசிங்க இன்று நீதிமன்றத்திற்கு முன்னிலையாக முடியாத நிலையில் வைத்தியசாலையில் இருப்பாரெனின் நீதிவான் நேரடியாக வைத்தியசாலைக்குச் சென்று, அவரைப் பார்த்து, உரிய உத்தரவுகளை வழங்க வேண்டும். இதுதான் வழமையான சட்ட ஏற்பாடு. இன்று அது நடக்குமா என்று தெரியவில்லை.

இந்த வழக்கின் இன்றைய 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# தனிக்கட்சி ஆட்சி முறைமையை ஏற்படுத்த ஜே.வி.பியினர் முயற்சி

## முன்னாள் அமைச்சர் சம்பிக்க குற்றச்சாட்டு



"இலங்கையில் தனிக்கட்சி ஆட்சி முறைமையை ஏற்படுத்துவதற்கு ஜே.வி.பி. முயற்சித்து வருகின்றது. இதற்கு எதிராக அனைவரும் அணிதிரள வேண்டும்."

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"1982 இல் அரச சொத்துகளுக்குக் கட்சியொன்று சேதம் விளைவித்ததால்தான், சட்ட நடவடிக்கையின் நிமித்தம் பொதுச் சொத்து சட்டம் கொண்டுவரப்பட்டது.

2022 இல் நாடாளுமன்றத்தைக் கொளுத்துவதற்காக வீதியில் இறங்கிய கட்சிதான், பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கைது செய்துள்ளது.

தனிக்கட்சி முறைமையொன்றை ஏற்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் அரசியல் சூழ்ச்சியின் மற்றுமொரு அங்கமே ரணில் விக்கிரமசிங்கவின் கைதாகும். எனவே, அரசியல் வேறுபாடுகள் இருப்பினும், ஜனநாயகத்தை மதிக்கும் அனைத்துத் தரப்பினரும் இதற்கு எதிராக அணிதிரள வேண்டும்.

அவ்வாறு இல்லையேல் 1987 மற்றும் 1989 காலப்பகுதியில் அவர்களால் செய்ய முடியாமல்போன தனிக்கட்சி ஆட்சி முறைமையை உருவாக்குவதற்கு முற்படக்கூடும்." – என்றார்.

# எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்தமைக்கு ஜனாதிபதி அநுரவுக்கு விசேட நன்றிகள்!

## சு.கவின் பொதுச்செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு



"இலங்கையில் நடைமுறையிலுள்ள பல கட்சி ஆட்சி முறைமையை ஒழித்து ஒரு கட்சி ஆட்சியை நிலைநிறுத்தத் தேசிய மக்கள் சக்தி அரசு முயற்சிக்கிறது. அரசின் இந்தச் சர்வாதிகாரப் போக்கைத் தடுப்பதற்காகவே இன்று எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்தமைக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு விசேட நன்றிகளைக் கூறுகின்றோம்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆட்சியைப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவடைவதற்கு முன்னரே எதிர்க்கட்சிகளை இவ்வாறு ஒன்றிணைத்தமைக்கு அவருக்கு விசேட நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாம் எதற்காக ஒன்றிணைந்தோம் என்பதை அனைவரும் அறிவர். ரணில் விக்கிரமசிங்க என்பது ஒரு காரணியாகும். ஆனால், இந்தத் தேசிய மக்கள் சக்தி நாட்டில் தொடர்ந்தும் காணப்படும் பல கட்சி ஆட்சி முறைமையை இல்லாதொழித்து ஒரு கட்சி ஆட்சி முறைமையை ஏற்படுத்த முயற்சிக்கின்றது.

இதற்காக அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் என அனைத்தையும் அடக்கும் செயற்பாடுகளை ஜே.வி.பி. முன்னெடுத்து வருகின்றது. தாம் நினைப்பது மாத்திரமே சரி என்ற நிலைப்பாட்டிலேயே அரசு இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

இந்தச் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராகவே நாம் ஒன்றிணைந்துள்ளோம். நாட்டு மக்கள் ஜனநாயகத்தையே விரும்புகின்றனர். எனவேதான் அரசியல் பேதங்கள் இன்றி ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக எம்மை ஒன்றிணைத்தமைக்கு ஜனாதிபதிக்கு விசேடமாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று நாட்டில் அரசுக்கு எதிரான நிலைப்பாட்டிலேயே சகலரும் காணப்படுகின்றனர். கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எதிர்க்கட்சிகளுக்கு அதிகளவில் வாக்களித்து மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர். தற்போது நாட்டில் அரசுக்கு எதிராகப் பொது மக்களே உள்ளனர். குறிப்பாக தொழிற்சங்கங்கள் இதனை நன்கு அறிந்துகொண்டுள்ளன.

இன்று செவ்வாய்க்கிழமை ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான தினமாகும். ஜனநாயகத்தைப் பாதுகாக்க விரும்பும் அனைவரும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும்." – என்றார்.




# இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 9.99 பில்லியன் அமெரிக்க டொலர்

2025 ஆம் ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 9.99 பில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

2024 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 7.79 வீத அதிகரிப்பாகும் என ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் நேற்று வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

அதனடிப்படையில், அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 73.61 புள்ளிகளால் வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

அந்தவகையில், கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் நேற்று 20,575.59 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

அதன்படி, கொழும்பு பங்குச் சந்தையின் மொத்தப் புரள்வானது நேற்று 4.4 பில்லியன் ரூபாவாக பதிவாகியது.









# பொலிஸ் மா அதிபர் சபாநாயகருடன் சந்திப்பு

பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, சபாநாயகர் ஜகத் விக்கிரம ரத்னவை சந்தித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய அண்மையில் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவை நாடாளுமன்றத்தில் சந்தித்தார்.

இதன்போது சபாநாயகர் பொலிஸ் மா அதிபர் அதிபருக்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அரசமைப்புப் பேரவையின் ஒருமித்த தீர்மானத்திற்கு அமைய, முழுமையான வெளிப்படைத் தன்மையுடனும் இந்த நியமனம் இடம்பெற்றிருப்பதாக சபாநாயகர் இங்கு குறிப்பிட்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, எந்தவொரு அரசியல் செல்வாக்கும் இன்றி பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டமை குறித்துத் தான் மகிழ்ச்சியடைவதாகவும், அது தனது உத்தியோகபூர்வ கடமைகளைச் சிறப்பாகச் செய்வதற்குச் சாதகமான சூழலை உருவாக்கும் என்றும் தெரிவித்தார்.

மேலும், பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

மிகவும் ஒழுக்கமான முறையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளைக் கண்டறிந்து அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும் என சபாநாயகர் முன்பு விடுத்த கோரிக்கையை நடைமுறைப்படுத்தத் தயாராக இருப்பதாக பொலிஸ் மா அதிபர் இங்கு தெரிவித்தார்.

இத்திட்டத்தின்படி, சாரதிகளின் பயணம் தொடங்கும் இடத்திலிருந்து அவர்கள் முடிக்கும் இடம் வரை அவர்களின் வாகனம் செலுத்தும் முறைகள் குறித்த தொடர்ச்சியான தகவல்கள் சேகரிக்கப்பட்டு, ஒழுக்கமான முறையில் வாகனங்களைச் செலுத்திய சாரதிகள் அந்த இடத்திலேயே பாராட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு சாரதிகளை ஊக்குவிக்கும் திட்டத்தின் மூலம் ஒழுக்கம் நிறைந்த சாரதிகளை உருவாக்கி, வீதி விபத்துக்களைக் குறைத்து உயிர் இழப்புக்களைத் தடுக்க முடியும் என்றும், இத்திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் சபாநாயகர் இங்கு நினைவுகூர்ந்தார்.



# கொழும்பு பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது

கொழும்பு பிராந்தியத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபர் உதித் லியனகே குற்றப்புலனாய்வுத் திணைக்களத் தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிராவஸ்திபுரவின் திபிரிகடவல பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகளுக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதையல் தோண்டிய விவகாரத்தில் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் மனைவி உள்ளிட்ட 08 பேர் அனுராதபுரம் பொலிஸாரினால் அண்மையில் கைது செய்யப்பட்டனர்.

இது சார்ந்த மேலதிக விசாரணைகள் பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படுகின்றன.

பெலியத்த-திக்வெல்ல வீதியிலுள்ள காணியொன்றை



அபகரித்த குற்றச்சாட்டின் கீழ் சந்தேகநபராக பெயரிடப்பட்ட ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உள்ளிட்ட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

# பணிப்பகிஷ்கரிப்பினால் தேங்கிய சுமார் 25 லட்சம் தபால் பொதிகள்

பணிப்பகிஷ்கரிப்பு நிறைவடைந்த நிலையில் தபால் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கம் தெரிவித்தது.

தாமதமான தபால் விநியோக சேவைகளை விரைந்து முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென தொழிற்சங்கத்தின் இணை ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

பணிப்பகிஷ்கரிப்பினால் நாடு முழுவதும் சுமார் 25 லட்சம் தபால் பொதிகள் தேங்கியுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், கொழும்பு மத்திய தபால் பரிமாற்றத்தில் எந்த தபால் பொதிகளும் தேங்கவில்லையென சிந்தக பண்டார மேலும் தெரிவித்துள்ளார்.

# யூடியூபர்களின் கருத்து தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை



தனி ஆட்கள் மற்றும் யூடியூபர்களின் அண்மைய சமூக ஊடக கருத்துகள் மற்றும் கணிப்புகள் நீதித்துறையில் ஏற்படுத்தியுள்ள தாக்கம் குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இதுபோன்ற நடவடிக்கைகள் சட்டத்தின் ஆட்சியையும் நீதி அமைப்பு மீதான பொதுமக்களின் நம்பிக்கையையும் குறை மதிப்பிற்கு உட்படுத்தும் என்று அந்தச் சங்கம் எச்சரித்துள்ளது.

இந்தநிலையில், நீதித்துறையின் சுதந்திரம் வெளிப்புறத் தலையீட்டிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்று சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அத்தகைய தலையீட்டைச் செய்பவர்கள் அரசியலமைப்பின் கீழ் சட்ட விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# ராஜபக்ஷக்களுக்கு எதிராகவும் விரைவில் நடவடிக்கை எடுப்போம்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு



ரணிலின் வெளிநாட்டுப் பயணத்தின்போது அரச நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டமை நிரூபணமாகியுள்ளதன் பிரகாரமே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவிற்கு மாத்திரமல்ல, விரைவில் ராஜபக்ஷக்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அரச உத்தியோகத்தர்களுக்கு உரித்தான சட்டமே ஜனாதிபதிகளுக்கும் உரித்தாகும், அவர்களுக்குப் பிரத்தியேகமான சட்டம் இல்லை, அதன் பிரகாரமே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடி தொடர்பாக விரைவில் விசாரணை நடத்தப்படும் என்றும், அலோசியஸிடம் பணம் பெற்றவர்கள் குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

மக்கள் வழங்கியுள்ள ஆணையில், இது முக்கியமான விடயமாகும் எனக் குறிப்பிட்ட பிமல் ரத்நாயக்க, அதனை நிறைவேற்றுவோம் எனக் கூறியுள்ளார்.

---

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தவணையையொட்டி மக்களின் செல்வாக்கை – ரணிலுக்கான ஆதரவை – அரசின் இந்த நடவடிக்கைக்கு மக்களின் எதிர்ப்பை – காட்டுவதற்காக பெருமக்கள் கூட்டத்தை இன்று தலைநகரில் எதிரணிகள் கூட்டவிருக்கின்றன என்று கூறப்படுகின்றது. அவற்றுக்கு மத்தியில் ரணில் நீதிமன்றுக்கு கொண்டுவரப்படுவாரா அல்லது நீதிவான் வைத்தியசாலைக்குச் சென்று அவரை பார்வையிட்டு உத்தரவுகளை வழங்குவாரா என்பது இன்று நாள் கட்டவிழும்போதுதான் பெரிய வரும்.

\+ + +

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்குக் கடிதம் எழுதும் பணி இப்போதைய கட்டத்தில் இன்னும் முடிவடையவில்லை என்றே தெரிகின்றது.

இப்போது செம்மணியை ஒட்டி எல்லாத் தமிழ் கட்சிகளும் சேர்ந்து கையெழுத்துப் போராட்டம் என்ற ஒன்றை ஆரம்பித்து இருக்கின்றன. கையெழுத்து வைக்கவிருக்கும் மகஜர் குறித்தும் கட்சிகளுக்கு இடையில் வாதப் பிரதிவாதங்கள், மகஜர் தயாரிப்பு இழுபறிகள், நீடித்து சுமுகமாகி இருப்பதாகத் தெரிகிறது.

தமிழரசு தவிர்ந்த ஏனைய கட்சிகள் ஏற்கனவே ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு அனுப்ப வேண்டிய கடிதத்தை ஒப்பமிட்டு அனுப்பி விட்டன.

தமிழரசு தன் பங்குக்கு ஒரு கடிதம் எழுதத் தயாராகி இருப்பதாக தெரிகிறது. நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழரசு அரசியல் குழுவின் மெய்நிகர் கலந்துரையாடலில் இது பற்றி தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. ஏற்கனவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செப்டம்பர் அமர்வில் தான் சமர்ப்பிக்கவிருக்கும் இலங்கை தொடர்பான அறிக்கையின் வரைவை வெளியிட்டு விட்டார். அந்த வரைவில் தமக்குள்ள அதிருப்திகளை தமிழரசுக் கட்சி அடுத்து வரும் நாள்களில் கடிதமாகத் தயாரித்து அவருக்கு அனுப்பி வைக்க முடிவு செய்திப்பதாகத் தெரிகிறது.

ஆக, ஜெனிவாவுக்கு கடிதம் – மகஜர் – அனுப்பும் பணி மாத்திரம் தொடர்கதை ஆக நீடிக்கின்றது.

\+ + +

சாவகச்சேரி நகர சபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றுக்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற உறுப்பினர்களுக்கு ஆபத்துக் கிட்டியிருப்பதாக என் பத்தியில் சுட்டிக் காட்டி வந்தேன். அது தொடர்பான வழக்கு நேற்று யாழ் மேல் நீதிமன்றுக்கு வந்து விட்டது.

இந்த வழக்கு நேற்றுதான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ் பிறப்பிக்கும் உத்தரவு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டது. ஆனால் உள்ளூராட்சி தேர்தல் முடிந்த கையோடே – கடந்த ஜூன் மாதமே – இந்தத் தேர்தல் ஆட்சேபனை வழக்கு சம்பந்தப்பட்ட தரப்புகளால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு விட்டாலும், அது பற்றி வெளியில் மூச்சு விடாத ஒரு நிலை அத்தரப்புகளினால் பேணப்பட்டு வந்திருக்கின்றது. நேற்று வழக்கு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ் உத்தரவு அனுப்பும் கட்டளை வெளியான பின்னரே இந்த விடயங்கள் மெல்ல மெல்ல கசிய விடப்பட்டிருக்கின்றன.

இந்த வழக்கில் வழக்காளிகளின் தரப்பின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு, மேற்படி சாவகச்சேரி நகர சபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றிற்குத் தாக்கல் செய்யப்பட்ட சைக்கிள் கட்சியின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டால், நகர சபையில் நான்கு வட்டாரங்களிலும், பிரதேச சபையில் ஒரு வட்டாரத்திலும் மேலதிகமாக உறுப்பினர்களை தமிழரசு கட்சி பெற்றுக் கொள்ளும் எனக் கூறப்படுகிறது. அத்தோடு தமிழ்க் காங்கிரஸ் பெற்ற வாக்குகள் கழிக்கப்பட்டு, புதிய தேர்தல் கணக்கீடுகள் செய்யப்படுமானால், இந்த இரண்டு சபைகளிலும் பட்டியல் மூலம் தெரிவான உறுப்பினர்களின் எண்ணிக்கைக் கட்டமைப்பும் மாறுபடுமெனத் தெரிகின்றது. வட்டார ரீதியில் தெரிவுகளைப் பெறாத ஈ.பி.டி.பியும், மான் கட்சியும் பட்டியல் ஊடாக மேலதிக உறுப்பினர்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சூழலும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

## ரணிலுக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரணிலுக்காக எதிரிணிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.”

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்காகச் சேவையாற்றியுள்ளார் எனவும், அவரைக் கைது செய்தமை கண்டிக்கத்தக்கது எனவும் ஹிருணிகா மேலும் குறிப்பிட்டார்.

## செம்மணி மனிதப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

இரண்டில் இருந்து 9 மனித என்புத் தொகுதிகளும் என மொத்தமாக 150 மனித என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டு நீதிமன்றக் கட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இடைநிறுத்தப்பட்ட இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் நேற்று மீள ஆரம்பமாகியுள்ளன.

இதன்போது ஜி.பி.ஆர். ஸ்கான் அறிக்கைகளின் பிரகாரம் தடயவியல் அகழ்வாய்வுத் தளம் ஒன்றை விரிவாக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

## ரணிலின் கைது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களின் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதை அடுத்து எழுந்துள்ள அரசியல் நிலைமை குறித்து கலந்துரையாடப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்திலேயே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ரணில் விக்கிரமசிங்கவின் கைது ஜனநாயக அரசியலுக்கு விடுக்கப்பட்ட மிகவும் வலுவான சவாலாகும். இந்தச் சவாலை எதிர்கொள்ள எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல அரசியல் 07

# ரணிலின் கைது...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது மிகவும் முக்கியமானது.

இதன் பொருட்டு, எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல அரசியல் கட்சிகளுடனும் குறுகிய கால மற்றும் நீண்டகால வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்காகவே இந்தக் கலந்துரையாடல் கூட்டப்படுகின்றது.” – என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் பேசிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,

“இந்தத் தருணத்தில் இரண்டு முக்கிய பிரச்சினைகளுக்கான பதில்களைத் தேட வேண்டும். முதலாவது ரணில் விக்கிரமசிங்கவை விடுவிப்பதற்கான வேலைத்திட்டமாகும். இரண்டாவது நாட்டின் ஜனநாயக ரீதியிலான அரசியலுக்கு விடுக்கப்பட்டுள்ள சவாலை வெற்றி கொள்வதாகும்.

இதன் நிமித்தம், சகல அரசியல் கட்சிகளும் தங்கள் அரசியல் கருத்துக்களை ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்றுபட வேண்டும்.” – என்றார்.

இதற்காக வேண்டி, எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்படுவது முக்கியம் என்று இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற சகல அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ரணில் விக்கிரமசிங்கவின் வழக்கு நடவடிக்கை போலவே அரசின் சகல ஜனநாயக விரோத வேலைத்திட்டங்களுக்கு எதிராகவும் எதிர்க்கட்சிகள் தொடர்ந்தும் இணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தை இங்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

இதன் எதிர்காலப் பணிகளுக்காகக் கட்சிச் செயலாளர்களின் பங்கேற்புடன் ஒரு செயற்பாட்டுக் குழுவை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நேற்று கூடிய சகல கட்சித் தலைவர்களும் நாளை புதன் கிழமை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் மீண்டும் கூடுவதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

































# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு தமிழரசு எம்.பி. சிறீதரன் விஜயம்

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பெண் நோயியல் மற்றும் சிறப்பு மகப்பேற்றுப் பிரிவை இயங்கு நிலைக்குக் கொண்டு வருதல், அந்தப் பிரிவுக்கான மருத்துவ உபகரணத் தொகுதிகளை வேறு வைத்தியசாலைகளுக்கு நகர்த்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பான உண்மைத்தன்மையை உறுதி செய்தல் உள்ளிட்ட விடயங்கள் சார்ந்து நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன், கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலைக்கு நேரில் சென்று வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினார்.

கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அசேல டிசாநாயக்க, உதவிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் துஷ்யந்தன், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் பிரபாத், உதவி மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் தயாளினி, மகப்பேற்று நிபுணர் மருத்துவர் சுதர்சன் ஆகியரோடு நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில், பெண் நோயியல் மற்றும் சிறப்பு மகப்பேற்றுப் பிரிவை இயக்குவதிலுள்ள தடைகள், ஆளணி உருவாக்கம் மற்றும் மேலதிக ஆளணி நியமனம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், அங்குள்ள உபகரணத் தொகுதிகளை வெளியிடங்களுக்கு நகர்த்துவது தொடர்பில் தமது மட்டத்தில் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், அவ்வாறான முயற்சிகளுக்குத் தாம் ஒருபோதும் உடன்படப்போவதில்லை எனவும் அதிகாரிகள் தரப்பில் உறுதியளிக்கப்பட்டது.

அதேவேளை, குறித்த பிரிவை இயக்குவதற்கான ஆளணி நியமனம் தொடர்பில் கடந்த 2025.05.29 ஆம் திகதிய மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் தன்னால் பிரேரணை முன்வைக்கப்பட்டிருந்ததைச் சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், 40 தாதியர்கள் உள்ளிட்ட 146 வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் சுகாதார அமைச்சின் கவனத்தைக் கோருவதன் மூலம் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

இதன்போது, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் சுப்பிரமணியம் யதீஸ்வரன், தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட வாலிபர் முன்னணியின் செயலாளர் நவரத்தினம் சயந்தன், உறுப்பினர் யோகேஸ்வரன் நிரோயன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.











நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# செம்மணி அதிர்ச்சி!

செம்மணி மனிதப் புதைகுழி விடயத்தின் சூத்திரதாரிகளில் ஒருவராகச் சந்தேகிக்கப்படும் பிரிகேடியர் சசிந்திர விஜேசிறிவர்தன என்பவரை இலங்கை இராணுவத் தலைமையக இயக்குநரகத்தின் 34 ஆவது பணிப்பாளராக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நியமித்திருக்கின்றார் என்ற அதிர்ச்சிச் செய்தி வெளியாகியிருக்கின்றது.

கிருஷாந்தி குமாரசாமி மீதான பாலியல் வல்லுறவு மற்றும் படுகொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட இராணுவச் சிப்பாயான சோமரத்தின ராஜபக்ஷ அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் செம்மணியில் மனிதப் புதைகுழிகள் தோண்டப்பட்ட போது 15 என்புக் கூடுகள் மீட்கப்பட்டிருந்தன. சோமரத்தின ராஜபக்ஷவின் வாக்குமூலத்தின் அடிப்படையில் அப்பகுதியில் கடமையாற்றிய இலகு காலாட் படைப்பிரிவை சேர்ந்த கப்டன் தர அதிகாரியாக இருந்த சசிந்திர விஜேசிறிவர்தன (செம்மணிக் குற்றங்கள் நிகழ்ந்ததாகக் கூறப்படும் காலத்தில் அங்கு லெப்டினன்ட் தர அதிகாரியாக இருந்தவர்) மற்றும் லலித் ஹேவா, சசிக பெரேரா, யடகம ஆகிய இராணுவத்தினர் மார்ச் 13, 2000 அன்று, கைது செய்யப்பட்டு யாழ் நீதிமன்றத்தின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (வழக்கு எண் B 28/99).

இந்தக் கைதிகளின் பாதுகாப்புக்கு என்ற பெயரில் இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றில் இருந்து கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டு அப்படியே கிடப்பில் போடப்பட்டு விட்டது.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட சசிந்திர விஜேசிறிவர்தனவும் ஏனைய இராணுவத்தினரும் கொழும்பில் மேன்முறையீடு செய்து 2000 ஆம் ஆண்டு ஜூலை 06 அன்று பிணையில் வெளியே வந்தனர். வழக்கு நிலுவையில் இருக்கத்தக்கதாக மீண்டும் இராணுவதில் சேவையில் நீடித்த சசிந்திர விஜேசிறிவர்தன முல்லைத் தீவு இராணுவ முகாம் அதிகாரியாக நீண்டகாலம் பணியாற்றினார். பனகொட இராணுவ முகாமிலும் பணியில் இருந்ததார். மேஜர், லெப்டினன்ட் கேணல், கேணல் ஆகிய பதவிநிலை உயர்வுகளைப் பெற்ற அவர் இப்போது பிரிகேடியராகி, இராணுவத் தலைமையக இயக்குநரகத்தின் பணிப்பாளருமாகி விட்டார்.

அன்மையில் செம்மணியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பான நீதிமன்ற அமர்வில் பாதிக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், மேற்படி சசிந்திர விஜேசிறிவர்தன உட்பட்ட படையினர் கைது செய்யப்பட்ட வழக்கை (வழக்கு எண்.B 28/99 ஐ) மீண்டும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்திற்கு மாற்றி விசாரணையைத் தொடர வேண்டும் எனக் கோரிக்கை முன்வைத்திருந்தார்.

அத்தோடு அந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளோர் (பிரிகேடியர் சசிந்திர விஜேசிறிவர்தன போன்ற அடையாளம் காணப்பட்ட அதிகாரிகள்) வெளிநாடு தப்பி செல்வதை தடுக்க வேண்டும் என நீதிமன்றத்தில் கோரிக்கையையும் முன்வைத்திருந்தார்.

இந்த நிலையில்தான் பிரிகேடியர் சசிந்திர விஜேசிறிவர்தனவை இராணுவத் தலைமையக இயக்குநரகத்தின் பணிப்பாளராக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நியமித்திருக்கின்றார் என்ற அதிர்ச்சிச் செய்தி வெளியாகியிருக்கின்றது.

செம்மணி மனிதப் புதைகுழி விடயத்தில் இந்த அரசிடமிருந்து நியாயம் கிடைக்கும் என்று நம்புவது துர்லபமே.





# விஜயகாந்தின் பெயரில் அரசியல்; விஜய்க்கு எதிராக பிரேமலதா கருத்து

விஜயகாந்த் பெயரை மதுரை மாநாட்டில் விஜய் குறிப்பிட்டது முதலே அரசியல் களத்தில் பல்வேறு யூகங்கள் முளைக்க தொடங்கின. விஜயகாந்த் மீதான விஜய்யின் திடீர் பாசம் குறித்த கேள்விகளும் எழ ஆரம்பித்துள்ளது. இதே கேள்வியை பிரேமலதாவும் வலுவாக எழுப்பியுள்ளார்.

சமீபத்தில் நடந்த மதுரை த.வெ.க. மாநாட்டில் பேசிய விஜய், "நான் இந்த மண்ணில் கால் எடுத்து வைத்ததும் ஒருத்தரை பற்றிதான் மனதில் ஓடிக்கொண்டே இருந்தது. சினிமா என்றாலும் அரசியல் என்றாலும் எனக்கு ரொம்ப பிடிச்சது எம்.ஜி.ஆர் தான். அவரோடு பழகுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால், அவர் மாதிரியே குணம் கொண்ட என் அண்ணன் புரட்சிக் கலைஞர் கேப்டன் விஜயகாந்த் அவர்களோடு பழகுவதற்கு நிறையவே வாய்ப்பு கிடைத்தது. அவரும் இந்த மதுரை மண்ணைச் சேர்ந்தவர் தானே அவரை மறக்க முடியுமா." என்று கூறினார்.

விஜய்யின் இந்தப் பேச்சு தே.மு.திக வுடனான கூட்டணிக்கு அச்சாரம், விஜயகாந்த் ஆதரவு வாக்குகளை கைப்பற்றும் அரசியல் வியூகம் என்றெல்லாம் பேச்சுக்கள் எழுந்தன. ஆனால், இந்த பேச்சுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார் பிரேமலதா. விஜய்யின் பேச்சுக்கு ரியாக்ஷன் கொடுத்த அவர், "ஒரு நாளும் யாரும் விஜயகாந்தாக மாறிவிட முடியாது. விஜயகாந்தின் வாக்குகளை விஜய் பிரிக்க நினைத்தால் மக்கள் ஏற்கமாட்டார்கள். விஜயகாந்த் குறித்து விஜய் பேசியதாலேயே கூட்டணியில் சேர்ந்து விடுவோம் என்றில்லை.

விஜயகாந்த் கட்சி ஆரம்பித்த போது, உடல்நிலை பாதிப்படைந்து இருந்த போதெல்லாம் அவரை சந்திக்கவில்லை, அப்போது அண்ணனாக தெரியவில்லை. விஜயகாந்த் மறைந்து இத்தனை ஆண்டுகள் தாமதமாகத்தான் அவரை தெரிகிறதா என உலகம் அறிந்த உண்மையை சீமான் உரக்க சொல்லி இருக்கிறார். சீமான் பேசியது நூற்றுக்கு நூறு உண்மை" என்று பிரேமலதா பேசியமை த.வெ.கவுக்கு திகிலை கிளப்பியுள்ளது. பிரேமலதாவின் இந்த ரியாக்ஷன் விஜய்க்கு அதிர்ச்சியை கொடுத்திருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

# கொடுத்து சிவந்த கரங்களுக்கு சொந்தக்காரர் நடிகர் விஜயகாந்த்

## அண்ணாமலை புகழாரம்





விஜயகாந்தின் துணிச்சலான பணிகள் போற்றுதலுக்குரியவை என அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

மறைந்த தே.மு.தி.க. நிறுவனரும், நடிகருமான விஜயகாந்தின் 73 ஆவது பிறந்தநாள் நேற்று தமிழகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இதையொட்டி அரசியல் கட்சித் தலைவர்கள் திரைப்பிரபலங்கள் என பலரும் விஜயகாந்தின் பிறந்தநாளில் அவரது இனிய நிகழ்வுகளை பகிர்ந்து வருகிறார்கள்.

இந்த நிலையில், விஜயகாந்த் பிறந்த நாளையொட்டி பா.ஜ.க. முன்னாள் தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள செய்தியில்,

"தே.மு.தி.க. நிறுவனர் தலைவர், பத்மபூஷன், அமரர் கேப்டன் விஜயகாந்த் பிறந்த தினம் இன்று. திரையுலகிலும், அரசியல் தளத்திலும், மாற்றத்தைக் கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கையை விதைத்தவர் கேப்டன் அவர்கள்.

நடிகர் சங்கத் தலைவராகவும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராகவும் அவரது துணிச்சலான பணிகள் போற்றுதலுக்குரியவை. கொடுத்துச் சிவந்த கரங்களுக்குச் சொந்தக்காரர். அவர் தொடங்கிய ஏழை, எளிய மக்களின் பசியாற்றும் அறப்பணி, இன்றும் தே.மு.தி.க. தலைமை அலுவலகத்தில் தொடர்வது பாராட்டுக்குரியது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும் தெய்வத்துள் வைக்கப் படும்" என்ற குறளுக்கு இலக்கணமாகத் திகழும், கேப்டன் விஜயகாந்த் நினைவுகளைப் போற்றி வணங்குகிறோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.




# உத்தரப்பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி 8 பேர் உயிரிழப்பு

இந்தியாவின் உத்தரப்பிரதேசத்தில் இடம்பெற்ற வீதி விபத்தில் 8 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 43 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம் ஒன்று , பார்வூர்தியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர்களில் இரண்டு பெண்களும் ஒரு குழந்தையும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அணு சக்தி விவகாரத்தில் ஈரான் அரசு அடிபணியாது

## உச்சத் தலைவர் காமேனி தெரிவிப்பு



அணு சக்தி விவகாரத்தில் அமெரிக்காவுக்கு ஈரான் அடிபணியாது என அந்த நாட்டின் உச்சத் தலைவர் காமேனி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காகொடுக்கும்அழுத்தத்தால் எவ்வித பலனையும் அவர்கள் பெற முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், ஈரான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலால் அமெரிக்காவுடன் மீண்டும் பேச்சுவார்த்தையைத் தொடர முடியாது என்றும் ஈரானின் உச்சத் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, அணு சக்தித்திட்டம் என்பது தீர்க்க முடியாத பிரச்சனை என்றும் ஈரானின் உச்சத் தலைவர் காமேனி தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம், ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே 12 நாள்கள் போர் இடம் பெற்றது.

ஈரானில் அணு விஞ்ஞானிகளையும் ஈரானில் நூற்றுக்கணக்கான மக்களையும் இஸ்ரேல் குண்டுவீசி கொன்றது.

பதிலுக்கு ஈரான் நடத்திய தாக்குதலில் இஸ்ரேலிலும் கடும் சேதங்கள் ஏற்பட்டன.

இதனிடையே, அமெரிக்காவும் ஈரானின் 3 அணுசக்தி நிலையங்களைத் தாக்கியது.

அதன் பாதிப்புகள் இன்னும் மதிப்பிடப்படவில்லை. இருப்பினும் அணுசக்தி நிலையங்களை முற்றிலும் அழித்ததாக அமெரிக்கா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.












# காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் ஊடகவியலாளர்கள் நால்வர் பலி

தெற்கு காசா பகுதியில் உள்ள மருத்துவமனை மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், சர்வதேச ஊடகவியலாளர்கள் நால்வர் உட்பட 15 பேர் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் ரொய்டரஸ், அல்–ஜசீரா, எசோசியேற்றேர்ஸ்பிரஸ்மற்றும்அமெரிக்கதொலைக்காட்சி நெட்வேர்க் ஆகிய பிரபலமான ஊடக நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து இஸ்ரேலிய இராணுவமோ அல்லது பிரதமரின் அலுவலகமோ இதுவரை எவ்வித தகவல்களையும் வெளியிடவில்லை.












# வியட்நாமின் கரையோரத்தை தாக்கிய சக்தி வாய்ந்த சூறாவளி

கிழக்கு வியட்நாமின் கரையோரப் பிரதேசத்தை சக்தி வாய்ந்த சூறாவளி தாக்கியுள்ளது.

இதனையடுத்து, கரையோரப் பகுதியைத் தொடர்ந்தும் பலத்த காற்று வீசுவதுடன், கனமழை பெய்துவருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

காஜிகி எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தச் சூறாவளி, மணித்தியாலத்திற்கு 133 கிலோ மீட்டர் வேகத்தில் வீசுவதாக வியட்நாமின் தேசிய வானிலை முன்னறிவிப்பு மையம் தெரிவித்துள்ளது.

காற்றின் வேகம் எதிர்வரும் மணித்தியாலங்களில் குறைந்தாலும், மழையின் தாக்கம் மேலும் அதிகரிக்கும் எனவும் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் பாதிப்படைந்துள்ள பிரதேசங்களைச் சேர்ந்த 586,000 இற்கும் மேற்பட்ட மக்களைத் தமது வீடுகளை விட்டு வெளியேறுமாறு உத்தர விடப்பட்டுள்ளது.









# குருக்கள்மடம் மனிதப் புதைகுழியை தோண்டுவதற்கு நீதிமன்றம் கட்டளை

## சந்தேகத்துக்குரிய இடம் குற்றப் பகுதியாக அறிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

1990ஆம் ஆண்டில் புனித ஹஜ் யாத்திரை முடித்த பின்னர் கல்முனை வழியாக காத்தான்குடிக்கு பயணம் செய்த முஸ்லிம்கள், ஆயுததாரிகளால் இடைமறிக்கப்பட்டு குருக்கள் மடத்தில் கொலை செய்யப்பட்டனர் என்று கூறப்படும் சம்பவத்திற்கு தொடர்புடைய வழக்கு களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

வழக்கில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பம் சார்பில் ஏ.எம்.எம். ரவூப் என்பவர் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.



இந்நிலையில் களுவாஞ்சிக்குடி நீதிவான் ஜே.பீ ஏ. ரஞ்சித்குமார் முன்னிலையில் வழக்கு எடுக்கப்பட்டது. இதன் போது நீதிமன்றம், மனிதப் புதைகுழி எனச் சநேகிக்கப்படு இடத்தை அகழ உத்தரவு பிறப்பித்துள்ளது.

அத்துடன் சம்பவ இடமான குருக்கள்மடம் கடற்கரை வீதியை சந்தேகிக்கப்படும் இடமாக அடையாளம் காட்டி பொலிஸாருக்கு பாதுகாப்பு வலயம் அமைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும் வழக்கு இன்று காலை 9.30 மணிக்கு மீளவும் மன்றில் எடுத்துக் கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

அத்துடன் குருக்கள் மடம் மனிதப் புதைகுழி அமைந்துள்ளதாகச் சந்தேகிக்கப்படும் பிரதேசத்தை களுவாஞ்சிக்குடி நீதிவான் நேரடியாக சென்று பார்வையிட்டார்.

# சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் ஆவணி சதுர்த்திப் பெருவிழா இன்று

**யாழ்ப்பாணம், ஓக. 26**

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய ஆவணி சதுர்த்திப் பெருவிழா இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6.15 மணிக்கு 1008 சங்காபிஷேகம், பஞ்சமுக பிள்ளையார் அர்ச்சனை, தீபாராதனைகள் நடைபெறும். மாலை 5 மணிக்கு மூலஸ்தான பூசையுடன் பெருவிழா ஆரம்பமாகும். தொடர்ந்து 6.30 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று சுவாமி உள்வீதி, வெளிவீதி வலம் வருவார்.

இதேவேளை, மாலை 5.30 மணிக்கு ஆலய உள்மண்டபத்தில் சைவசமய அறிவுசார் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படும். விசேட நிகழ்வாக ஆலய அறநெறி பாடசாலை மாணவர்களின் வயலின், வீணை இசை நிகழ்வும் நடைபெறும்.

தொடர்ந்து, இரவு 8.30 மணிக்கு இராப்போசனம் வழங்கப்படும் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

# மயிலிட்டியில் தம் படகுகளைப் பார்த்த பின்னர் 14 தமிழக மீனவர்களும் உடன் நாடு திரும்பினர்







(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய குற்றத்தின் பேரில் பிடிக்கப்பட்டு, நீதிமன்றங்களினால் விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்களின் 7 படகுகளின் உரிமையாளர்கள் தங்கள் படகுகளை நேற்றுப் பார்வையிட்ட பின்னர் உடனடியாகவே கடல் வழியாக மீண்டும் தமிழகத்திற்குப் புறப்பட்டனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய குற்றத்தில் நூற்றிற்கும் மேற்பட்ட படகுகள் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு மயிலிட்டித் துறைமுகத்தில் தரித்து வைக்கப்பட்டுள்ளன. இந்திய மீனவர்களின் படகுகளில் நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்ட 7 படகுகளின் உரிமையாளர்கள் உள்பட 14 பேர் நேற்றைய தினம் தனியான படகில் யாழ்ப்பாணம் மயிலிட்டித் துறைமுகத்தை மாலை 5 மணியளவில் அடைந்தனர்.

அவர்கள் தமது படகுகளை பார்வையிட்டமையோடு அவற்றை இங்கு வைத்துத் திருத்தம் செய்ய முடியாத போதிலும், அவற்றை கட்டியிழுத்துச் செல்ல முடியும் எனவும், அப்படிக் கட்டி இழுத்துச் செல்ல வேண்டிய படகுகளைச் சூழத் தரித்து நிற்கும் ஏனைய படகுகளை அகற்றும் பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளது எனவும் தமிழக மீனவர்கள் தெரிவித்தனர்.

இந்திய நாணயத்தில் பல லட்சம் ரூபா பெறுமதியான இந்தப் படகுகள் ஆண்டுக் கணக்காக முறையான பராமரிப்பு இன்றி பெரும் சேதமடைந்துள்ளன. மிஞ்சியவற்றையேனும் எடுத்துச் செல்ல விரும்புகின்றோம் எனத் தமிழகத்தில் இருந்து வந்த மீனவர் ஒருவர் தெரிவித்தார். தமது படகுகளை ஆர்வத்துடன் பார்வையிட்டு, அவற்றை தழுவி மகிழ்ந்தமையோடு ஒளிப்படங்களும் எடுத்துக்கொண்டனர்.




# திருமலை, கந்தளாய் வைத்தியசாலைகளுக்கு சுகாதார அமைச்சினால் இரு அம்புலன்ஸ்கள்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் கந்தளாய் மாவட்ட வைத்தியசாலை என்பவற்றுக்கு, சுகாதார அமைச்சிலிருந்து இரண்டு அம்புலன்ஸ்கள் நேற்று வழங்கப்பட்டன.

20 அரசு வைத்தியசாலைகளுக்கு 2.57 மில்லியன் ரூபா மதிப்புள்ள 20 அதிநவீன அம்புலன்ஸ்கள் வழங்கப்பட்டன. இதன் கீழ் திருகோணமலை, கந்தளாய் வைத்தியசாலைகளுக்கு இரண்டு அம்புலன்ஸ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான

# ‘வீரமுனை’ என்ற பெயர்ப் பலகையை அகற்றுவதற்கு சம்மாந்துறை பிரதேச சபைக்கு அதிகாரமும் இல்லை!

## கல்முனை மாநகரசபை முன்னாள் உறுப்பினர் ராஜன் சீற்றம்

( வி.ரி.சகாதேவராஜா)

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக் குச் சொந்தமான வீரமுனைக்கான பெயர்ப்பலகையை அகற்ற சம்மாந் துறை பிரதேச சபைக்கு எந்த அதிகார மும் இல்லை.

இவ்வாறு கல்முனை மாநகர சபை யின் முன்னாள் உறுப்பினர் சந்திர சேகரம் ராஜன் நேற்றுத் திங்கட்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் சீற்றத்துடன் தெரிவித்தார்.

கல்முனை ஊடக மையத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கை யில் அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலத்தில் வீரமுனை ஆண்டிர சந்தியில் ஆலய வளைகோபுரம் அமைப் பதற்கு முயற்சித்த வேளையில் இதே தரப்பினர் இடையூறு விளைவித்தனர். அன்றைய அரசாங்கமும் நடவடிக்கை எடுக்கவில்லை.

அதேபோல் அண்மையில் வீதி அபி விருத்தி அதிகாரசபை தனது ஆதிக்கத் துக்குட்பட்ட ”ஏ” தர பிரதான வீதியில் வீரமுனை பெயர்ப் பலகையை அமைப்ப- தற்கு முற்பட்டபோது, பிரதேச சபையின் அதிகாரங்கள் என்ன என்று தெரியாத ஒரு சில உறுப்பினர்கள் இடையூறு விளைவித்து தடுத்திருக்கின்றனர்.

இதன் பின்னணி என்ன? இனவாதம் விதைத்தவர்கள் இன்று செல்லாக்காசாய் போய்விட்டார்கள். இனவாதத்தை வைத்து அரசியல் செய்த காலம் மலையேறி விட்டது.

பிரதேச சபைக்குரிய அதிகாரங்களை அறியாமல் இரு சமூகங்களையும் மோத விடுகின்ற செயற்பாட்டை அங்குள்ள ஒரு சில உறுப்பினர்கள் முன்னெடுக் கின்றார்கள். இது கவலைக்குரிய விட யம்.

கல்முனைக்கான பெயர்ப்பலகை கல்முனை தென் எல்லையான தரவைப் பிள்ளையார் ஆலயம் அருகில் நடப் பட்டிருக்க வேண்டும். ஆனால் அது கல்முனைக்குடி எல்லையில்

சாய்ந்தமருது முடிவிடத்தில் அமைந்தி ருக்கின்றது.

இருந்தாலும் பரவாயில்லை என்று நாங்கள் கேட்கவில்லை. இதே போன்று கல்முனை கடற்கரை பள்ளிவாசலின் பெயர்ப் பலகை கல்முனை பிரதான வீதியில் தரவைப் பிள்ளையார் கோவி லுக்கு முன்பாக நடப்பட்டிருக்கின்றது. ஒன்றரை கிலோமீட்டர் உட்புறமாக அந்த பள்ளிவாசல் அமைந்து இருக்கின்றது.




ஆகவே மக்களுக்கு வழிகாட்ட அப் பெயர்ப் பலகை அமைந்தது நியாய மானது. நாங்கள் தமிழர்கள் அதனை ஏன் என்று கேட்கவில்லை.

அதேபோன்று மட்டக்களப்பு ஆரை யம்பதியில் உட்புறமாக உள்ள பால முனை முஸ்லிம் கிராமத்துக்குரிய பெயர்ப்பலகை பிரதான வீதியில் நடப் பட்டிருக்கிறது. அதனை கூட நாங்கள் கேட்கவில்லை.

அவையெல்லாம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரமுள்ள பிர தேசம். அது அவர்களது உரிமை, கடமை.

இந்த நிலையில் சம்மாந்துறை பிரதான வீதியில் வீரமுனை பகுதியில் வீரமுனைக் கிராமத்தை சுட்டிக் காட்டு கின்ற பெயர்ப்பலகையை அதற்கு முழுஅதிகாரமும் கொண்ட வீதி அபி விருத்தி அதிகாரசபை நடுகின்ற பொழுது அதற்கு எந்த அதிகாரமும் இல்லாத பிரதேச சபையினர் தடுத்து நிறுத்துகின்றார்கள். இது நியாயமா? நீதியா? படித்த சமூகம் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

இதனைப் பொலிஸார் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். வீதி அபி விருத்தி அதிகாரசபையினர் ஏன் இதனை சட்டம், நீதிக்கு முன் நிறுத்தவில்லை? கடமைக்கு இடையூறு விளைவித்த என்று கடந்த காலங்களில் எத்தனையோ வழக்குகள் நீதிமன்றத்தில் உள்ளன.

இன உறவு பற்றி பேசுகின்ற தவிசாளர் என்ன சொல்கின்றார்?

அம்பாறை மாவட்டத்தில் மூவின மக்க ளும் சேர்ந்து வாக்களித்தன் பலனாக தேசிய பட்டியல் எம்.பியாக ஆதம்பாவா நியமிக்கப்பட்டார்.

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்கு மாறு கூறிய போராளிகள் வீரமுனையி லும் இருக்கின்றார்கள். இவர்கள் ஏன் இந்தப் பிரச்சினைக்கு ஆதம்பாவாவிடம் சென்று தீர்த்து வைக்க முடியாதா?

மேலும் ஆதம்பாவா எம்.பி. இந்த வீரமுனை சம்பவத்தை இதுவரை ஏன் கண்டுகொள்ளாமல் ஒதுங்கிக் கொள் கிறார்?

இன,மத பேதமற்ற அரசாங்கம் என்று கூறும் இன்றைய அரசாங்கம் இதனை ஏன் கண்டு கொள்ளவில்லை?

வீரமுனையில் ஓர் உறுப்பினரு முள்ளார். இதுவரை அவர் வாய் திறக்க வில்லை. அவரை அந்த மக்கள் எதற் காகத் தெரிவு செய்தார்கள்?

அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்தால் வேற இடம் என்றால் மறு கணம் கூட்டுக்குள் அடைத்து விடுவார்கள்.

ஆனால் இங்கே வீதி அபிவிருத்தி அதிகாரிகள் வாய் மூடி மௌனியாகத் திரும்பி வந்திருக்கிறார்கள். ஏன்?

அவர்கள் இதுவரை பொலிஸிக் முறைப்பாடு செய்தார்களா? சட்ட நட வடிக்கை எடுத்தார்களா?

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான சாலையில் பெயர்ப்பலகை வைக்க வருபவர்களை பிரதேச சபை தடுக்க முடியாது. அவர்கள் செய்யக் கூடியது வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் அனுமதி பெற்றார்களா எனச் சரிபார்த்து, தவறு இருந்தால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குத் தகவல் கொடுப்பதுதான்.

நாங்கள் பலகாலமாகப் பல பிரச்சினை களை எதிர்நோக்கி வந்த ஒரு சமூகமாக - தமிழ்ப் பேசும் மக்களாக - தமிழர்க- ளும் முஸ்லிம்களும் இருந்து, வந்திருக் கின்றோம் .

முரண்பாடை களைந்து நீதியின் பால் தீர்க்க வேண்டும்.

அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லாவிட்டால் நாங்கள் எல்லோரும் சேர்ந்து வீரமுனை பெயர்ப் பலகையை நாட்ட வேண்டி வரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.- என்றார்.



# இரத்தினபுரி இந்து ஆலயங்களில் ரணிலுக்கு ஆசி வேண்டி பூஜைகள்

(எஸ். இரவீந்திரன்)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிற்கு ஆசி வேண்டியும் அவர் சீக்கிரம் குணம் பெறுகின்றமையுடன் சகல பிரச்சினைகளில் இருந்தும் விடுதலை பெற்று நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் மீண்டும் சிறப்பான முறையில் சேவையாற்ற வேண்டுமென வேண்டி இலங்கை தொழிலாளர் காங்கிரஸினால் நேற்று இரத்தினபுரி மாவட்டத்தின் இறக்குவானை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், இரத்தினபுரி சிவன் கோவில், இரத்தினபுரி புதியநகர் பத்திரகாளியம்மன் ஆலயம் உள்ளிட்ட பல இந்து ஆலயங்களில் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

இதில் சப்ரகமுவ மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் யெஹியா எம். இப்ளார், கொடக்கவலை பிரதேச சபை உறுப்பினர் யோகநாதன்., காவத்தைப்பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சுரேஸ், இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர் எஸ்.

சிவாசுரேந்திரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.





# பண்டாரவன்னியனின் 222ஆவது வருட ஞாபகார்த்த நிகழ்வு நேற்று வவுனியாவில்

**(கி.வசந்தன்)**

தேசிய மாவீரன் பண்டாரவன்னி யனின் 222 ஆவது வருட ஞாப கார்த்த நிகழ்வு வவுனியா மாநகரசபை மற்றும் கலாசார பேரவையின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக வளாகத்தில் அமைந் துள்ள பண்டாரவன்னியன் சதுக்கத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது மாவட்ட செயலக வாயி லில் இருந்து சிலை அமைந்துள்ள பகுதி வரை பண்டாரவன்னியனின் படைசூழ விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து பண்டார வன்னியனின் சிலைக்கு மாலை அணி விக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட் டது. அவர் தொடர்பான நினைவுப் பேருரையினை சு.ஜெயச்சந்திரன் நிகழ்த்தினார். ஏனைய கலைநிகழ்வு களும் இடம்பெற்றன.

மாநகர முதல்வர் சு.காண்டீபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் பி.ஏ.சரத்சந் திர, மேலதிக அரச அதிபர் நா.கமல தாசன், பிரதேச செயலாளர் இ.பிரதாபன், மாநகர துணை முதல்வர் ப.கார்த்தீ-பன், ஆணையாளர் பொ.வாகீசன், மாநகரசபையின் உறுப்பினர்கள், உத்தி யோகத்தர்கள், பொது அமைப்பினர் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.
















# இன்றைய ராசி பலன்கள் - 26.08.2025




இன்று பதற்றமான சூழ்நிலைகள் காணப்படும். அதனை சமாளிப்பதற்கு கால தாமதமாகும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு இது உகந்த நாள் அல்ல. சில சௌகரியங்களை விட்டுகொடுக்க நேரும்.

கூடுதல் பணிகள் காரணமாக குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண அதனை தவிர்த்தல் நல்லது.

வீட்டுப் புனரமைப்புக்காக பணம் செலவு செய்ய நேரும். தேவையற்ற செலவினங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

தாயின் உடல் நலத்துக்காக செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.




இன்று ஆன்மீகத்தில் ஈடுபடவேண்டிய சூழல் ஏற்படும். அது உங்களுக்கு ஆறுதலைத் தரும்.

இன்று வெற்றிகரமான பலன்களை காண்பதற்கு நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். இன்று பணிகள் நிலுவையில் இருக்கும். தாமதங்கள் காணப்படும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள்.இதனை தவிர்த்தல் நல்லது. அமைதியாக இருக்க வேண்டும். உறவில் நல்லிணக்கத்தை பராமரியுங்கள்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன்கள் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள்களில் வலி காணப்படலாம். தியானம் மேற்கொள்வதன் மூலம் அமைதி பெறலாம்.




இன்று உங்களுக்கு மிகவும் சாதகமான நாள். உங்களின் உறுதியும் தைரியமும் உங்களுக்கு நல்ல பலனை அளிக்கும். மொத்தத்தில் இன்று காணப்படும் வளர்ச்சி உங்களுக்கு தன்னம்பிக்கையை கொடுக்கும்.

இன்று புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். பணியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் திறமை மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் மனம் திறந்து கருத்துக்களை பரிமாறிக் கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணம் கிடைக்கக் கூடிய அதிர்ஷ்டமான நாள். பண வரவு காணப்படும்.

உங்கள் மன உறுதி காரணமாக இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும்.




இன்று உற்சாகமான நிலையை பராமரிப்பீர்கள். அதிக சிந்தனைகளை தவிர்த்தல் வேண்டும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் அமைதி பெறலாம்.

பணிகள் அதிகமாக காணப்படும். எனவே தவறுகள் நேரலாம். எனவே கவனமாகப் பணியாற்ற வேண்டும்.

உங்களின் எரிச்சல் மனப்பான்மையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையை நட்பு முறையில் அணுக வேண்டும்.

கவனக்குறைவு காரணமாக பண இழப்பு ஏற்படலாம். தேவையற்ற செலவினங்கள் ஏற்படலாம்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம். உணவு முறையில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும் நாள். மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருக்க வேண்டும். உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்க தெளிவான மனதுடன் இருக்க வேண்டும்.

பணிகள் கடினமாக காணப்படும். பனியின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் மனதில் தோன்றும் கசப்பு உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும்.

இன்று கூடுதலான தேவையற்ற செலவுகள் ஏற்படும். இதனால் கவலைகள் உண்டாகும். பண இழப்புகளும் காணப்படும்.

முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. பிரார்த்தனை மற்றும் தியானம் நல்ல பலனைத் தரும்.




இன்று பலன்களில் ஏற்றத்தாழ்வு காணப்படும். உங்கள் பணிகள் சுமுகமாக நடக்க நீங்கள் அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். சில சமயங்களில் நம்பிக்கை இழப்பீர்கள். நல்ல பலன்களைப் பெற நம்பிக்கையோடு இருங்கள்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். சக பணியாளர்களிடம் கவனமாகப் பழகவும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள்.உங்கள் பிரியமானவரை புரிந்துகொண்டு நடந்து கொள்ளுங்கள்.

இன்று நிதிநிலை சீராக இருக்காது. இன்று நிதி நிலையை சமாளிப்பது கடினம்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கண் பரிசோதனை செய்துகொள்வது நல்லது.




இன்று முன்னேற்றமான நாள். எதிர்காலம் பற்றிய பரந்த நோக்கு கொண்டிருப்பீர்கள். உங்கள் இலக்குகளில் வெற்றி பெற கடினமாக உழைப்பீர்கள். இடையில் ஏற்படும் தடைகளை முறியடிப்பீர்கள்.

இன்று பலன் எதையும் எதிர்பார்க்காமல் பணியாற்றுங்கள். இதன் மூலம் குறித்த நேரத்தில் பணிகளை முடித்து தர இயலும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற முடியம்.

உங்கள் துணையிடம் நேர்மையாக விசுவாசமாக இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் அபரிமிதமாக காணப்படும். இன்று வங்கியிருப்பை நல்ல முறையில் பராமரிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று சுமுகமான பலன்கள் காணப்படும். உங்கள் இலக்குகளை அடைய இன்றைய நாளை பயன்படுத்துவீர்கள். உங்கள் வளர்ச்சி இன்று உறுதி. இன்று முக்கியமான முடிவுகளை எடுக்கலாம்.

நீங்கள் உங்கள் வேலைகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் கடின உழைப்புக்கு உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்களின் நம்பிக்கை உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணபுழக்கம் சீராக இருக்கும். உங்கள் ஆற்றலை நிதி வளர்ச்சிக்கு பயன்படுத்துவீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது.

# இன்றைய ராசி பலன்கள் - 26.08.2025




இன்று நீங்கள் எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக்கொள்ளவேண்டும். இன்று புதிய மனிதர்களின் சந்திப்பை பெறுவீர்கள். இதனால் உங்களின் தொடர்பு வட்டாரம் விரிவடையும். வாழ்க்கை சிறப்பாக இருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக இன்று மும்மரமாக காணப்படுவீர்கள். பணிகள் அதிகமாக இருக்கும் என்ற காரணத்தினால் திறமையான முறையில் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேற்றுமை அல்லது விவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணை யுடன் நட்பாக பழக வேண்டும்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். பணம் வருவதற்கான அதிர்ஷ்டம் குறைவு.




இன்று நற்பலன்கள் கிடைக்கும் நாள். முன்னேற்றத்தை நோக்கி செல்வீர்கள். முக்கியமான முடிவுகள் இன்று பலன் தரும்.

உங்கள் தனித் திறமைக்காக பாராட் டப்படுவீர்கள். உங்கள் சக பணி யாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்களின் நெருங்கிய நண்பர் ஒருவரின் திருமண விழாவில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் பிரியமானவரை மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் வைத்திருங்கள்.

இன்று பணப்புழக்கம் திருப்தி அளிக்கும். உங்கள் சேமிப்பு திறன் அதிகரிக்கும். லாபம் தரும் புதிய முதலீட்டு முயற்சிக்கான திட்டங்களை வகுக்கலாம்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உயர்ந்த ஆற்றலும் உறுதியும் உங்களிடம் காணப்படும்.




இன்று நீங்கள் தன்னம்பிக்கை இழக்கக் கூடிய கடினமான சூழ்நிலை காணப்படும். நம்பிக்கையுடன் சவால்களைக் கையாள வேண்டும். பிரார்த்தனையில் ஈடுபடுவது நல்ல பலனைத் தரும்.

குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளை முடிப்பதில் தாமதங்கள் நேரலாம். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்களின் சிறந்த பேச்சாற்றல் மூலம் உங்கள் துணையிடம் நல்லுறவை கொண்டிருப்பீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படுத்த முடியும்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளது. உங்கள் பிரியமானவரின் ஆரோக்கியத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரும்.




இன்று நீங்கள் விரும்பிய பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களுக்கு சாதகமான பலன்களை தரக்கூடிய திட்டங்களை வகுப்பீர்கள்.

பணியிடச் சூழல் முன்னேற்றகரமான பலன்களைத் தரும். கூடுதல் ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் கிடைக்க வாய்ப்புள்ளது.

பணியில் காணப்படும் பதற்றம் காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். இத்த கைய சூழ்நிலைகளை தவிர்க்க வேண்டும். இருவரிடையே நல்லுறவு ஏற்பட விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பணபுழக்கம் சிறப்பாக காணப்படும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் உயரும். நிதி பாதுகாப்பு காணப்படும்.

# இனியபாரதியின் மற்றொரு நெருங்கிய சகா களுவங்கேணியில் கைதாகிப் பின் விடுவிப்பு

(கனகராசா சரவணன்)

இனிய பாரதியின் சகாவான மட்டு களுவங்கேணியைச் சேர்ந்த பால சுந்தரம் என்பவரை நேற்றுத் திங்கட் கிழமை மட்டு. களுவங்கேணி யில் வீட்டில் வைத்துக் குற்றப் புல னாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ள னர் எனப் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எனினும் சுமார் 7 மணித்தியால விசாரணையின் பின்னர் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவரை விடு தலை செய்துள்ளனர் என அவரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்த நபரை நேற்று பகல் களுவங் கேணியிலுள்ள அவரது வீட்டில் வைத்து, கொழும்பில் இருந்து சென்ற குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்த னர. இதனையடுத்து அவரை கொண்டு சென்று சுமார் 7 மணித்தியால தொடர் விசாரணையின் பின்னர் இரவு 9.00 மணியளவில் அவரை விடுவித்துள்ள னர்.

அம்பாறை திருக்கோவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர்



உதயகுமார் துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் உட்பட 2005 மற்றும் 2008க்கு இடையில் கிழக்கு மாகாணத்தில் நடந்த கொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள், துப்பாக் கிகளைப் பயன்படுத்துதல், சித்திர வதைக் கூடங்களை நடத்துதல், மிரட்டிப் பணம் பறித்தல் போன்ற சம்பவங்களுடன் தொடர்புடைய கருணா அணியைச் சேர்ந்த இனியபாரதி என்றழைக்கப்படும் கே. புஸ்பகுமார், அவரது சகாவான சசீதரன் தவசீலன் ஆகியோரை கடந்த ஜ/லை 6 ஆம் திகதி குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்தனர்.

இதனையடுத்து இவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப் படையில் இனியபாரதியுடன் சேர்ந்து இயங்கி வந்தவரும், அவரின் சகா வுமச்ன களுவங்கேணியைச் சேர்ந்த பாலசுந்தரம் என்பவரை இவரது வீட்டில் வைத்து நேற்றுத் திங்கட்கிழமை பகல் குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்தனர்.

இதேவேளை இனியபாரதி, அவரது சாகா கைது தொடர்பாக கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழு கடந்த ஜ/லை 6 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். அதில் இக்குழுவி னர் செய்த வன்முறைகள் குறித்து விவரமாக குறிப்பிடப்படிருந்தது.